ஏ.வி.சி. கல்லூரி மாணவர் இதழ்

# கிராந்சசு

அறிந்துபரப்பி ஆக்கம் செய்குவோம்



நன்கொடை

ரூ.5/-

மார்ச் 2010

போன் : 04364-222261

உலகத் தரம் வாய்ந்த கம்ப்யூட்டர் டிஜிட்டல் பிரிண்டிங்

# டிஜி மீடியா

## டிஜிட்டல் பிரிண்டர்ஸ்

உங்களுக்கான சேவையில் ஒவ்வொரு நிமிடமும் மகிழ்ச்சியே!

- நிறுவன விளம்பரங்கள்
- அரசியல் பேனர்கள்
- சினிமா விளம்பரங்கள்
- விசிட்டிங் கார்டுகள்
- திருமண அழைப்பிதழ்கள்
- ஒளிர் பலகைகள்
- போட்டோ லேமினேசன்
- பழைய கருப்பு வெள்ளை படங்களை கலராக்குதல்


மிக குறைந்த விலையில்

இவை அனைத்தும் ஒரே இடத்தில் உடனுக்குடன்

email : dirdigimedi...@gmail.com



# விதைக்குள் இருக்கும் விருட்சங்கள்



800 copy



செய்தி 2 தூது 21

# எதிர்காலம் நோக்கி

மனித வாழ்க்கையில் காலத்திற்கேற்ப பல மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தாலும் எத்தனை விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், முன்னேற்றங்கள் இருந்த போதிலும் நமது திருநாட்டில் மாறாத ஒன்று அரசியல்தான். அறிய சாதனங்கள், ஊடகங்கள் பல இருந்தும் நாட்டில் நடக்கும் நிகழ்வுகளைக் கூட புரிந்துக்கொள்ளாத ஏமாறும் பாமர மக்களுக்கு பஞ்சமில்லை. மக்களின் அன்றாட தேவைகளை புரிந்துக்கொண்டும், அரசாங்கம் கொண்டுவரும் பல திட்டங்களை நடுவில் வரும் சிலர் செய்யும் தவறுகள், ஊழல்கள்தான் அதிகம்.

விவசாயத்தைச் சார்ந்துள்ள நமது நாடு தற்சமயம் சிறப்பு பொருளாதார மண்டலம் என்கின்ற பெயரில் விவசாய நிலங்களில் தொழிற்சாலைகளையும், அனல் மின்நிலையங்களையும் அமைக்கத் தனியாருக்கு தாரைவார்த்து வருகிறது. உலகமயமாக்கல் என்ற பெயரில் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கை இல்லை. பதுக்கல்காரர்களின் கை ஓங்கிதான் உள்ளது. இவை இப்படியே சென்றால் உணவுப் பற்றாக்குறை, பஞ்சம், அயல்நாடுகளில் இருந்து உணவு தானியங்கள் இறக்குமதி செய்யப்படும் நிலை உருவாகும். அமெரிக்க விஞ்ஞானிகள் உலக வெப்பமயமாதலால் 2020 இல் சூரியன் இரண்டாக உருவாகும் என்று கூறுகின்றனர். ஆதலால் எதிர்காலத்தில் பல பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். இந்த சூழ்நிலையில் படித்த இளைஞர்கள் அரசியல் தலைவர்களாக வந்தால் மட்டுமே இந்த நிலைமை மாறும் என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் மக்கள் யாரை எதிர்பார்க்கின்றனர் என்று எதிர்காலத்தில் தெரியாது. பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

- ஆசிரியர்








# ஜெனிபர் ஸ்விட்ஸ் & பேக்கரி

மயிலாடுதுறை.

போன் : 242060.222834

கிளைகள் :

- கண்ணாரத் தெரு. T.V.R ரோடு
- சுந்தரம் தியேட்டர் அருகில்
- மஹாவிஷ்ணு டிரேட் செண்டர்
- அய்யாரப்பர் மேல வீதி அருகில். T.V.R ரோடு
- கடை வீதி, மங்கைநல்லூர்

உரிமை : எஸ்.பவுல்ராஜ்

# எல்லாம் நீயே....



நீ
என் அன்புத் தோழி
உன் அன்பால்
நான் புத்துயிர் பெற்றேன்.
என் கடினங்கள் கூட
உன் வார்த்தையில் எளிதாகின...
என் கண்ணீர் கூட
உன் மழையில் இடிநீராகின...
என்னால் காணப்பட்ட
கனவுகள் கூட
உன்னால் நினைவாகின...
என்னிடம் எழுந்த
கோபங்கள் கூட
உன்னிடம் வீழ்ந்து
சாந்தங்களாகின...
என் வாழ்வில்
உன் வடிவமிருந்தால் போதும்
நான்
பல வெற்றிகள் காண்பேன்
ஏனெனில்
என்னை உருவாக்கும்
தாய் தந்தை தெய்வம் தோழி
எல்லாம் நீயே...

ப.சரண்யா
இளம் வணிக ஆட்சியியல் (நிறை)





# சுமந்தவள்

அன்று மகனே
நீ ஏசியில் வாழ்வதற்கு
அவள் வெயிலில்
வெதும்பினாள்
நீ மொசைக் தரையில்
நடக்க அவள்
சிமெண்ட் கலவையில்
காலம் கழித்தாள்
நீ அறுசுவை உண்டிட
அவள் ஆறிப்போன
டீ, வடை உண்டாள்
நீ உயர்ந்த நிலைமைக்கு வர
உடலை மறைக்க
துண்டைக் கொண்டு மூடி
காலம் கழித்தாள்
ஆனால் இன்றோ
நீ
மாடிவீட்டில் வாழ்கிறாய்
உன் தாயோ
முதியோர் இல்லத்தில்
உழைத்து ஓய்ந்துபோன
சுருங்கிய தேகத்தோடு
பலவீனமான உடலோடு
பாசத்தைச் சுமந்துக்கொண்டு...!

ஆர்.கலையரசி
முது விலங்கியல் (முதல்)

நாகை, திருவாரூர் மாவட்டத்திலேயே மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற (Hall Marks) ஹால் மார்க் முத்திரைப் பதித்த தங்க நகைகள் வாங்க ஒரே நிறுவனம் . . . . .

நாராயணன் ஜுவல்லரி A/c
மயிலாடுதுறை

916 KDM

222082
☎ : 222282
227782

எங்களின் 20-ஆம் ஆண்டு விழாப் போட்டிக்காக நினைவு பரிசுகளை வழங்கிய நாராயணன் ஜுவல்லரி அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றோம்.





# தமிழ் இதழ்களோடு ஒரு கண்ணோட்டம்

ஒவ்வொரு நாளும் வெளிவரும் செய்தித்தாட்களைத் தினசரி என்று கூறலாம். தினசரி இதழ்களில் காலை, மாலை என இரு வகைகள் உள்ளன. வாரம் இருமுறை, மும்முறை வெளிவரும் இதழ்கள் உள்ளன, உலக நாடுகளின் கல்வி, சமுதாயம், பண்பாட்டு அமைப்பு நாளிதழ்களாவே இருக்கிறது.

நடைமுறையில் உள்ளது. நாளிதழ், வார இதழ், வாரம் ஒருமுறை, வாரம் இருமுறை, மாதம் ஒருமுறை, மாதம் இருமுறை, காலாண்டு ஒரு முறை, அரையாண்டு ஒருமுறை, ஆண்டுக்கு ஒரு முறை, இருமுறை என இதழ்கள் வெளிவருகின்றன.

**தினசரி நாளிதழ் [காலை / மாலை]**

தினத்தந்தி, தினமணி, தினமலர், தினகரன்,முரசொலி, நமது எம்.ஜி.ஆர், மாலை முரசு, மாலை மலர், தின முரசு,தினத்தூது.

**வார இதழ்கள்/ மாத இதழ்**

ஆனந்தவிகடன், குமுதம், குங்குமம், கல்கி, ராணி, புதிய தலைமுறை, கிராம ராஜ்யம் போன்றவற்றைச் சொல்லலாம்.

திங்களிருமுறை வெளிவரும் இதழ்களுக்கு சான்றாக வர்த்தககுரல், வானொலி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். முத்திங்கள் இதழ்களுக்கு எடுத்துக்காட்டாக பாக்கியப்பரணி, மாணவர் தியான குறிப்பு, அரையாண்டு இதழுக்குச் சான்றாக ஆராய்ச்சி, ஆண்டு இதழுக்கு எடுத்துக்காட்டாக கல்லூரியின் ஆண்டு விழா மலர்களைக் குறிப்பிடலாம். இதழ்களில் வெளிவருகின்ற செய்திகள் படைப்புகள் ஆகியவற்றில் அவை மேலோங்கியிருக்கின்ற அடிப்படையில் இதழ்களைப் பல்வேறு வகைகளில் பிரித்துப் பார்க்கலாம். அவற்றில் குறிப்பிடத்தக்கவற்றை நாம் கீழே காண்போம்.

பொழுதுபோக்கு இதழ்கள் - குமுதம், ராணி, கல்கி, ஆனந்தவிகடன்.
அரசியல் இதழ்கள் - ஜனசக்தி, திராவிட நாடு, விடுதலை, அண்ணா

இலக்கிய இதழ்கள் - செந்தமிழ்ச்செல்வி, எழுத்து, ஞானரதம்
கவிதை இதழ்கள் - கவிதை, முல்லைச்சரம், குயில்
சிறுவர் இதழ்கள் - அணில், அம்புலிமாமா, கண்ணன், கோகுலம்

அறிவியல் இதழ்கள் - கலைக்கதிர், விஞ்ஞான விவசாயம்
மருத்துவ இதழ்கள் - நல்மணி, மூலிகைமணி
கல்வி இதழ்கள் - கல்வி, ஆசிரியர் குரல்
மகளிர் இதழ்கள் - சௌபாக்கியம், மங்கை
தொழில் இதழ்கள் - மேழிச்செல்வம், ஓர் முரசு, பனைச்செல்வம், நெசவாளி

வாணிப இதழ்கள் - வணிக செய்தி, வர்த்தகர் உலகம்
ஜோதிட இதழ்கள் - மாத ஜோதிடம், அதிர்ஷ்டம்
இல்ல இதழ்கள் - சக்தி சர்க்கரை ஆலை, செய்தி மடல்
திரைப்பட இதழ்கள் - பேசும்படம், குண்டூசி, சினிமா கதிர், திரை உலகம்

விளையாட்டு இதழ்கள் - ஒலிம்பிக் போல்வன
பன்மொழி இதழ்கள் - திருமலை திருப்பதி தேவஸ்தான இதழ், ஸ்ரீ ரங்கநாத பாதுகா

சமய இதழ்கள் - கூட்டுறவு, கிராம ராஜ்யம், சர்வோதயம்
எழுத்தாளர் இதழ்கள் - பாரதி, எழுத்தாளன்,தமிழ்ப்பாவை
செய்தி இதழ்கள் - அமெரிக்கன் ரிப்போர்ட்டர்
புலனாய்வு இதழ்கள் - நக்கீரன், ஜூனியர் விகடன்,நெற்றிக்கண்
தொகுப்பு இதழ்கள் - மஞ்சரி போல்வன
புதின இதழ்கள் - ராணி, முத்து, மாலைமதி, ஊதாப்பூ
தினச்சுற்று இதழ்கள் - புரட்சிக்கவி போல்வன
மாணவர் இதழ்கள் - இளந்தூது போல்வன


தமிழில் இதுபோன்ற பல நூல்கள் இருக்கின்றன. நமக்கு தெரிந்தும் தெரியாமலும் இருக்கும் பல நூல்களை அறிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்.

ஆசிரியர் குழு





# விடியுமா? விடியும் விடியட்டும்...



கடலுக்கு நடுவே கனத்தக்குரல்
மனிதர்கள் பிணங்களாய்
அலையோசைக்கு நடுவே
கொலையோசை இதயத்தை நெருடுகிறது
பள்ளிக் குழந்தைகளும் பருவப்பெண்களும்
பயங்கரத் தாக்குதலின் பட்டியலில்
அடிமை விலங்கை உடைத்தெறிய
ஆயுதமேந்திய போராளிக்குத்
தீவிரவாத முத்திரை
தானம் வழங்கிய
தமிழனின் கரங்கள்
மனமிழந்து தானம் வாங்க
தயாராகும் கொடுமை
கள்ளத்தோணியில்
கட்டு மரத்தினில்
பட்டுப்போன வாழ்வோடு
பரிதவிக்கும் மக்களுக்கு
பரிதாப வாழ்வு
விடியுமா? விடியும்
போராட்டக் களத்தினில்
நீயும் நானும் கைக்கோர்த்தால்
விடியாதோ... ஓர் பொழுதென்று
விளங்காமல் விழித்திருந்த – மக்களுக்கு
விடியட்டும் ஓர்பொழுது!

கே.எஸ்.சுபஸ்ரீ
இளம் கணிதம் (இடை)

# Sun Software College

SOFTWARE TRAINING AND DEVELOPMENT

SSC

An ISO 9001-2000 Certified Institution
(Affiliated to TCEDS)
LARGEST NETWORK IN INDIA

50% OFFER

for College Students, Engineering & Polytechnic Students,

- DCA, DOA
- HDCA
- DDTP
- PGDCA
- Dip.in TALLY 9.0
- Dip.in ACAD 2010
- JDCA, Oracle
- Hardware Course (Free Old System)
- .NET, J2EE, ASP, VB, JAVA, C, C++



"Free Project for : Polytechnic, BSc., B.C.A., Students only"

Beta
English Training Academy
SUN BETA

SUN BETA
SPOKEN ENGLISH
PUBLIC SPEAKING
INTERVIEW SKILLS
COMMUNICATION SKILLS
PERSONALITY DEVELOPMENT

Contact : SUN SOFTWARE COLLEGE
CADD WORLD
SUN BETA SPOKEN ENGLISH
15, RAZACK TOWER, CUTCHERY ROAD, MAYILADUTHURAI
TEL : 226975, 225002. Visit us @ www.sunsoftwarecollege.com




# இதய தெய்வம்



வார்த்தைகளால்
எழுத முடியாத
கவிதை
வர்ணங்களால்
தீட்ட முடியாத
ஓவியம்
கற்களில்
செதுக்க முடியாத
சிற்பம்
காற்றால்
தீண்ட முடியாத
தென்றல்
வானவில்லில்
காட்ட முடியாத
வண்ணம்
எவராலும்
கொடுக்க முடியாத
பாசம்
என்னிடம்
சேர முடியாத
செல்வம்
எத்தனை எத்தனை
கோயில்கள்
இருந்தாலும்
இல்லந்தோறும்
இருந்த தெய்வம்
அம்மா...!

மு.ஜோதிபாசு
இளம் காட்சி தகவியியல் (முதல்)

# தூதுவின் தூது

தொடக்கக் காலத்தில் மக்களுக்காகத் தொடங்கப்பட்ட கட்சிகள் இன்று பெரும்பாலும் பணத்தினை மட்டுமே பெறுவதற்காக ஆரம்பிக்கப் பட்டு வருகின்றன. ஏனென்றால் பணத்தினை ஒருமுறை போட்டால் அடுத்த முறை அவற்றினைச் சேர்த்துப் பெற்றுவிடலாம் என்று எண்ணி செயல்படுகின்றன என்பதைத் தவிர மக்களுக்காக அல்ல என்பது இன்றைய இளைய சமுதாயம் நன்கு அறியும்.

இளைஞர்களின் மோகம் திரைத்துறையில் இருப்பதை நன்கு அறிந்து அந்தக் காலம் முதல் (தென்னிந்தியாவில் மட்டும்) தற்சமயம் வரை திரைத்துறையினர் அதிகம் கொள்கை இல்லாமல் அரசியல் கட்சிகள் ஆரம்பித்து அதில் பலர் வேடிக்கை பார்க்கும் ரசிகர்கள் கூட்டத்தை நம்பி பொருளை இழந்தவர்களும் அதிகம் உண்டு.அதே சமயத்தில் ஆட்சிக்கு வந்து அதிக சொத்துக்களை சேர்த்தவர்களும் உண்டு. ஒரு சிலர் தனது சொத்துக்களைத் தங்களது காலத்திற்கு பிறகு ஏழைகளுக்கு வழங்கியவர்களும் உண்டு.

அரசியல்வாதிகள்தான் 60 வயதிலும் தங்களை இளைஞர்களாகவே எண்ணி அவர்களின் தலைவர்களாகவும், உள்ளனர். இதில் பால் அபிஷேகமும் உண்டு, உடலில் பச்சைக் குத்திக்கொள்வதும் உண்டு. இதெல்லாம் எதற்காக? அவர்களுக்குப் பதவி வேண்டும். பதவி வந்தால் அதிகாரத்தைப் பயன்படுத்திச் சொத்துச் சேர்ப்பதே குறிக்கோள். குறிப்பாக தமிழகத்தில் விவசாயக் கடன் தள்ளுபடிகள், அதிக விவசாய மானியங்கள் இருந்தும் விளைநிலங்கள் குறைந்த காரணம் என்ன என்பதை முதலில் சிந்திக்க வேண்டும்.





அண்டை மாநிலமான கர்நாடகாவில் 1970 முன் இருந்த விளைநிலங்களை விட இப்போது பல மடங்கு அதிகரித்துள்ளன. தமிழகத்தில் அப்போது இருந்ததில் 30% தான் உள்ளன காரணம் அரசியல்.

'சோழநாடு சோறுடைத்து' என்ற பெருமை தஞ்சைக்கு உண்டு . ஆனால் தற்சமயம் ஆந்திரா அரிசிதான் மக்களுக்கு உணவு. எத்தனைத் திட்டங்கள் கொண்டு வந்தாலும் அவற்றின் முடிவு என்ன என்பது தெரியவில்லை. எதனைச் செய்தாலும் அது மக்களுக்கு முழுமையாகச் சென்று சேருகிறதா என்று எண்ணாமல் செயல்படுவதுதான். புதிய திட்டங்கள் என்றால் புத்துணர்ச்சி பெற்றதுபோல் எண்ணங்கள் தற்போதைய மக்களின் மனநிறைவுகள்.

நாட்டில் எந்த அரசுத்துறையில் அதிக வேலை இருக்கிறதோ இல்லையோ லஞ்ச ஒழிப்புத்துறைக்கு தலைவலிதான். பொதுமக்களும் அரசு அறிவிக்கும் நல்லபல திட்டங்களைப் பயன்படுத்திக்கொண்டு அதில் குறையிருந்தால் வெளிப்படையாக அரசுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதே இன்றைய இளைய சமுதாயத்தின் வேண்டுகோள்.

அதே சமயம் மாணவர்களுக்கு வழங்கப்படும் நல்லபல திட்டங்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இன்றைய இளைய மாணவ சமுதாயம் நாளை அரசியலிலும் ஈடுபட அதிக வாய்ப்புகள் உண்டு என்பதை மறக்கக்கூடாது. நமக்கு நமது தாய்நாட்டின் வளர்ச்சியே முக்கியம். அப்போதுதான் கலாம் கண்ட கனவ நினைவாகும். கனவு காண்பவருக்குதான் அதனைச் செயல்படுத்துப் ஆற்றலும் கைவரப்பெறும்.

- ஆசிரியர்

☎: 242015

# Shreem Readymade

(Passion For Fashion)

Exclusive Men's Fashion ShowRoom

*Successfully Completed a Decade*
*to Welcome the next Decade*
*with all your Love*
*and Support*

**GROUP SHIRTS**
**AVAILABLE ON ORDER**

**SHREEM READYMADE**

42, Mahadhana Street,
Mayiladuthurai - 609 001.
Lunch Break : 2 to 4 p.m.
Sunday Holiday





உலகத்தரம் வாய்ந்த 916 தங்க நகைகள்
வாங்க சிறந்த இடம்



PHONE : 222793

A·R·C

விஸ்வநாதன் & கோ

A.R.C.பில்டிங்
மயிலாடுதுறை

22 CT பவுன்
புதிய டிசைன் நகைகளுக்கு

ஜுவல்லர்ஸ்
ஞாயிறு ஷோரூம் உண்டு
செவ்வாய் விடுமுறை

Mail Address : mail@arcvisvanathanjewellers.com
Website : www.arcvisvanathanjewellers.com

குடந்தை மாநகரில்

# ஸ்ரீ மீனாட்சி விலாஸ் பாத்திர மாளிகை

எங்களிடம் திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பீரோ, கட்டில், கிரைண்டர், உயர்தர முக்க டேபிள் மற்றும் அனைத்துவகை பர்னிச்சர்களும் சுவாமிசிலைகள், கோபுரகலசங்கள், திருக்கோயில் பொருட்கள் தரமாகவும் விலை குறைவாகவும் கிடைக்கும்.

40 ஆண்டுகளாக உற்பத்தி செய்து மொத்த வியாபாரத்தில் முதன்மை பெற்ற நிறுவனம் பொதுமக்களின் நேரடி சேவைக்காக சில்லறை வியாபார நிறுவனத்தை துவக்கி உற்பத்தி விலைக்கே தர இன்முகத்துடன் காத்துக் கொண்டிருக்கிறோம்.

உங்கள் வருகைக்காக நாங்கள் காத்திருக்கின்றோம்
வாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!

Phone : (0435) 2402797

# ஸ்ரீ மீனாட்சி விலாஸ் பாத்திர மாளிகை

பாத்திரம் & பர்னிச்சர்

நெ. 29,30 பொற்றாமரை

தெற்கரை, கும்பகோணம்.





## விடியலை நோக்கி

உழைத்துக் களைத்த
எனக்கு
வருத்தம் தான்
சோம்பேறியாய்க்
கழித்த நாட்களை
எண்ணி
இன்று புத்துணர்வுடன்
புறப்பட்டேன்
புயலாய்
புது உலகம் படைக்க
நண்பா நீயும் வா
வீணாக்கிய காலத்தை
வித்தாக மாற்ற
விழுந்தது போதும்
விடியலை நோக்கி
விண்ணைத் தொட்டு
விசித்திரம் படைத்து
சரித்திரம் படைக்க
நண்பா நீயும் வா
விடியலை நோக்கி
சாதனை படைத்து
சரித்திரத்தில்
இடம் பெற....

கே.புனிதவள்ளி
இளம் நுண்ணுயிரியல் (இடை)

## உன்னோடு

தாய் என்றால் பாசத்தோடு
தந்தை என்றால் பணத்தோடு
ஆசான் என்றால் அறிவோடு
அல்லி என்றால் சந்திரனோடு
தாமரை என்றால் கதிரவனோடு
வள்ளி என்றால் வேலவனோடு
ரோஜா என்றால் முள்ளோடு
ஊட்டி என்றால் குளிரோடு
அன்பே நான் என்றும் உன்னோடு



## கைப்பேசி நகைச்சுவை

நிலவைப் பார்
ரசனை புரியும்
கதிரவனைப் பார்
கடவுளின் சக்தி புரியும்
கண்ணாடியைப் பார்
கடவுளின் காமெடி புரியும்
ஹா!..... ஹா!..... ஹா!.....

ச.சரண்யா
இளம் வணிக ஆட்சியியல் (நிறை)

# அந்நிய மண்ணில் அற்புத ஆலயங்கள்

**இந்தோனேசியா**

சமஸ்கிருதத்தின் வாசுகி ஒரு கோயில் பாசுகியாக மாறி, ஒரு கோயில் என்ற பெயரில் திகழ்கிறது. பாற்கடலைக் கடைந்தபோது மந்தார மலை மத்தாகவும், வாசுகி எனும் பாம்பை நாணாகவும் இருந்தன. அப்போது இழுபடும் வலி தாளாமல் வாசுகி விடத்தைக் கக்குகியது. இப்படித் தன்னையே தியாகம் செய்து கொண்ட வாசுகி பாம்பைக் கௌரவிக்கும் வகையில் உருவான கோயில்தான் இது. பண்டைய காலத்தில் பாலி மன்னனான ஸ்ரீகேசவர்மதேவா இந்த கோயில் நிர்மாணத்தில் ஈடுபட்டிருந்தன.

**கம்போடியா**

இந்திய ஆன்மிகப் பண்பாட்டைப் பெரிதும் பிரதிபலிக்கக்கூடிய ஒரு நாடு என்றே கம்போடியாவைச் சொல்லலாம். அதற்கு ஓர் உதாரணமாக ஆங்குர் பகுதியிலுள்ள பெருமாள் ஆலயம். 12வது நூற்றாண்டில் இரண்டாவது சூர்யவர்மனால் நிர்மாணிக்கப்பட்ட கோயில் இது. கமெர் கட்டிட பாணியில் அமைந்தது. தற்போது பெரும்பாலும் சுற்றுலா தலமாகவே திகழ்கிறது. கோயில் என்ற அமைப்பில் இருந்தாலும் பிற வழிபாடுகள் எல்லாம் அங்குச் சுற்றுலா வரும் பயணிகள் யாராவது மேற்கொண்டால்தான் உண்டு.

**இங்கிலாந்து (பிரிட்டன்)**

ஐரோப்பாவிலேயே மிகப்பெரிய இந்துக்கோயிலாகக் கருதப்படுகிறது. இங்கிலாந்திலுள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆலயம். சுமார் 22 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இக்கோயிலில், பல தெய்வ சந்நிதானங்கள் உள்ளன. இந்தியாவில் உள்ள பெருமாள் கோயில்களில் நடைபெறும் எல்லா பூஜைகளும் இங்கும் உண்டு. அந்நாட்டின் பிற பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் அதிகளவில் வந்து தரிசனம் செய்கின்றனர்.





**அமெரிக்கா (கலிபோர்னியா)**

ஒன்பது ஆண்டுகால முயற்சியின் விளைவாக 1986 முதல் கயிலைநாதனும், வைகுண்ட வாசனும் கலிபோர்னியாவில் கோயில் கொண்டிருக்கிறார்கள். சிவா விஷ்ணு ஆலயம் என்றழைக்கப்படும் இக்கோயிலில், இரு சமய வழிபாடுகளும் எந்தக்குறைவுமின்றி நிறைவேற்றப்படுகின்றன. புத்தாண்டு, விநாயகர் சதுர்த்தி போன்ற சிறப்புக் காலங்களில் இங்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தைத் தொடுகிறது என்ற தகவல் வியப்புக்குரியது.

**மலேசியா**

சுண்ணாம்புக் கல்லால் ஆன மலையே இப்போதைய பத்துமலை. 1988 இல் ஆண்டு தம்புசாமி பிள்ளை, கந்தப்ப தேவர், திருவேங்கடம் பிள்ளை மூவரும் பத்துமலையில் வேல் பதித்து வணங்கினர். இவர்களுக்குப் பத்துக்குகை தோட்டத் தொழிலாளர்கள் ஆலயம் எழுப்ப உதவினர். அப்போதைய மாவட்ட அதிகாரி ஜோஸ், இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். பக்தர்கள் அனைவரும் சேர்ந்து வழக்கு தொடர்ந்தனர். முருகனின் திருவருளால் தீர்ப்பு பக்தர்களுக்குச் சாதகமானது. மலேசிய நீதிமன்றம் பத்துமலையை இந்துக்கள் வழிபாட்டுத் தலமாக அறிவித்தது. தொடக்கத்தில் பக்தர்கள் முருகனைத் தரிசிக்கக் கொடிகளையும், மர வேர்களையும் பிடித்து மலை ஏறிச்சென்றார்கள். பிறகு மரப்படிகள் அமைத்தனர். 1936 முதல் கான்கீரிட் படிகளாயின. 1975 இல் இரண்டாவது பாதை அமைக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் இந்த படிகளுக்குப் படித்திருவிழா விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. இங்குத் தைப்பூசத் திருவிழா இந்து, சீன மக்களால் மிக விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. சிங்கப்பூர், சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, நியுசிலாந்து போன்ற நாடுகளிலிருந்தும் பக்தர்கள் இவ்விழாவிற்கு வருகிறார்கள்.

கு.புவனேஸ்வரி
முது நுண்ணுயிரியல் (நிறை)

போன் : 223002
222003

K.V.S

பாத்திரக்கடை
பர்னிச்சர் மார்ட்

110, பட்டமங்கலத் தெரு,
மயிலாடுதுறை.

ஏ.வி.சி. கல்லூரி மாணவர் இதழ்

# முத்தான மூன்று

1. எவருக்காகவும் காத்திருக்காத மூன்று
   நேரம், இறப்பு, வாடிக்கையாளர்கள்
2. உறவுகளை விரோதியாக்கும் மூன்று
   நகை, பணம், சொத்து
3. யாராலும் திருட முடியாது மூன்று
   கல்வி, அறிவு, கற்பனை
4. மறக்க கூடாதது மூன்று
   பிறந்த நாள், திருமண நாள், தாய் தந்தை மறைந்த நாள்
5. யாருக்காகவும் திரும்பாத மூன்று
   தாயிடம் இருந்து பிறப்பு, கல்லறைக்குச் செல்லும் இறப்பு, கற்காத கல்வி
6. வாழ்க்கையில் ஒருமுறை பயணிக்கும் மூன்று
   பிறப்பு, இறப்பு, குழந்தை பருவம்
7. திரை மறைவுக்கு உகந்த மூன்று
   சொத்து, பெண், உணவு
8. மறக்க முடியாத மூன்று
   மாதா, பிதா, குரு
9. இளமையில் வரக்கூடாத மூன்று
   வறுமை, சேராத நட்பு, தாய் தந்தை இல்லாமை
10. முதுமையில் வரக்கூடாத மூன்று
    ஏமாற்றம், வறுமை, தோல்வி

ஆதிரியர் (?) சு

# விதியை வென்ற மதி...

ஓர் அழகிய சிற்றூர் அதில் ஓர் எளிய குடும்பம். குடும்பத் தலைவர் பெயர் முருகன், அவரது மனைவி பெயர் குணவதி இவர்களுக்கு ஓர் அழகிய புத்திசாலியான மீனா என்ற மகள் பள்ளியில் +2 வகுப்பு படித்து வந்தாள். படிப்பில் அதிக கவனம். வகுப்பில் முதல் மாணவி மற்றும் பள்ளிகளுக்கிடையே நடைபெறும் எந்தப் போட்டிகளிலும் பரிசு வெல்வது இவளது தனித்திறமை. முருகனின் வருமானம் மிகவும் குறைவு. ஆனாலும் அவரது மனைவி இருப்பதை கொண்டு குடும்பம் நடத்தி வந்தார். மகளைப் படிக்க வைப்பதற்கே மிகவும் சிரமம்தான் ஆனாலும் அதை சமாளித்து மகளைப் படிக்க வைத்தார்.

இந்நிலையில் மீனாவிற்குப் பொதுத்தேர்வு நெருங்கியது. மீனாவும் மாநில அளவில் முதல் மாணவியாக வரவேண்டுமென்று மிகக்கடுமையாகப் படித்து வந்தார். இந்த சமயத்தில்தான் மீனாவிற்கு அடிக்கடி காய்ச்சல் வந்தது. அவளை மருத்துவரிடம் அழைத்துச்சென்று ஆலோசனை செய்தபோதும் அந்த காய்ச்சல் குணமாகவில்லை. காய்ச்சலுடன் வயிற்றுவலியும் சேர்ந்துக் கொண்டது.

மீனாவின் உடல்நிலையை எண்ணி குணவதி மிகவும் வேதனையடைந்தார். உள்ளூர் மருத்துவரின் ஆலோசனைப் படி மேல்சிகிச்சைக்காக நகரத்தில் உள்ள சிறப்பு மருத்துவரை அணுகியபோது அவளுக்கு இரத்தப்புற்று நோய் இருப்பது தெரிய வந்தது. நோய் பற்றிய விபரம் எதுவும் மீனாவிற்கு அவளது தாய் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் பனிரண்டாம் வகுப்பில் முதல் மாணவியாக வருவாள் என்று ஆசிரியர்களும், உடன் சக மாணவிகளும் எதிர்பார்த்தனர். ஆனால் பத்தாம் வகுப்பில் முதலிடம் பிடித்தவளுக்கு இந்தத் தேர்வில் நான்காமிடம் கிடைத்தது. அதை நினைத்து மிகவும் வேதனை அடைந்தாள். அவளை ஆசிரியர்களும்,





பெற்றோரும் சமாதானம் செய்தனர். அவளது எண்ணம் எல்லாம் இந்திய ஆட்சிப் பணித்துறை (ஐ.ஏ.எஸ்) தேர்வில் தேர்ச்சிப்பெற்று மாவட்ட ஆட்சியாளராக வர ஆசை. சிறுவயது முதலே அதற்காக முயற்சியில் ஈடுபட்டு வந்தாள்.

இந்நிலையில் அவளது தாய் மருத்துவரை அணுகி அவளது ஆசைப்பற்றி கூறினார். மருத்துவரும் இப்போது நோய் தொடக்க நிலையில்தான் உள்ளது. இதற்கு தீர்வு மேல்சிகிச்சை மேற்கொண்டால் குணம்பெறலாம் என்று கூறிவிட்டார். இந்தச் சமயத்தில் அந்த ஊருக்கு யோகா பயிற்சி பற்றிய விவரத்தை ஒருவர் கூறி யோகா பயிற்சியில் ஈடுபட்டால் நல்ல முன்னேற்றம் தெரியும் என்று கூறிவிட்டார். அவரின் ஆலோசனைப்படி குணவதியும் மீனாவிற்கு யோகா வகுப்பில் சேர்த்துவிட்டார். அவளும் தினமும் தவறாமல் பயிற்சி ஈடுபட்டு வந்தாள். அதன் பலன் பயிற்சியில் ஈடுபடும் போது அவளுக்கு உடலில் சோர்வு அசதி இல்லை. இதில் மாற்றம் தெரியவந்தது. இரண்டு ஆண்டுகள் கடந்தன. அந்த ஊரில் தொண்டு நிறுவனங்கள் மூலம் நடைபெற்ற மருத்துவ முகாமில் மீனாவிற்குப் பரிசோதனை நடந்தது. அவர்களது ஆலோசனை பெயரில் அனைத்து வசதிகளும் கூடிய மருத்துவமனைக்கு அவர்களது செலவில் அழைத்துச்சென்றார்கள். அங்குப் பரிசோதனை செய்த போது அவளுக்கு இரத்தப்புற்று நோய் முழுவதும் குணமாகி இருந்தது. அவளது தாயின் ஆதரவினாலும், அவளது விடா முயற்சியாலும் அவள் ஐ.ஏ.எஸ் தேர்வில் தேர்ச்சிப்பெற்று அரசுப்பணியில் உள்ளாள் . ஒவ்வொருவரும் மன உறுதியுடன் போரிட்டால் வெற்றி நிச்சயம் நம் கையில்.

"மதியால் விதியை வெல்லலாம்"

எம்.ரியாசுல் தஸ்லீமா
இளம் கணிதம் (முதல்)

# S. VENKATRAMANI
M.Com.,M.Phil.,PGDCA.,D.H.T.,

Ph : 04364 - 242066
Cell : 9843118099

INFO TECH
COMPUTER INFORMATION TECHNOLOGY

- TCPS IT Education
- Job Works
- DTP Works
- All Software and
- Hardware Course
- Project Works

II Floor, Kamal Mansion,
(Opp : Municipal Hr.Sec.School)
140, Pattamangala Street, Mayiladuthurai - 1.






## தெரிந்துகொள்ள வேண்டிய – ஐந்து

1. பஞ்ச கன்னிகை
   அகலிகை, சீதை, தாரை, திரௌபதி, மண்டோதரி
2. பஞ்ச வாசனை
   இலவங்கம், ஏலம், கற்பூரம், சாதிக்காய், தக்கோலம்
3. பஞ்ச அமிர்தம்
   தயிர், தேன், நெய், பால், சர்க்கரை
4. பஞ்ச வில்வம்
   வில்வம், கிளுவைப்பத்திரம், மாவிலங்கு, விளா, நொச்சி அல்லது நாயுருவி (சைவ பூடணம்)
5. பஞ்ச சீலம்
   கொல்லாமை, பொய்யாமை,
   கல்லாமை, காமமின்மை, இரவாமை
6. பஞ்ச திராவிடர்
   தெலுங்கர், தமிழர், கன்னடர், மராட்டியர், கூர்ஜரர்
7. பஞ்ச பட்சி
   வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில்
8. பஞ்ச புராணம்
   தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா,
   திருப்பல்லாண்டு, பெரிய புராணம்
9. பஞ்ச இரத்தினம்
   வயிரம், முத்து, மாணிக்கம், நீலம், மரகதம்

10. பஞ்ச வர்ணம்

வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை

11. பஞ்சாங்கம்

கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வாரம்

12. பஞ்ச மூலம்

செவ்வியம், சித்திரமூலம், கண்டுபாரங்கி, சுக்கு, பேரரத்தை

13. பஞ்சமா பாதகங்கள்

பொய், களவு, கள்ளுண்ணல், குருநிந்தை, கொலை

14. பஞ்ச பாணம்

முல்லை, அசோகு, வனசம், சூதம், நீலம்

15. பஞ்சாயுதம்

சங்கு, சக்கரம், கதை, கத்தி, வில்

16. பஞ்ச பரமோட்டி

அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள்

17. பஞ்ச சிகை

தலை, உச்சி, கண், புருவம், முழங்கை

18. பஞ்ச தேவர்

பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன்

19. பஞ்ச ஸ்தலம்

காசி, சோமநாத், பூரி, ராமேஸ்வம், வைத்தியநாத்

19. பஞ்ச பூதத்தலம்

திருக்காஞ்சி, திருவானைக்கா, திருவண்ணாமலை,

திருக்காளத்தி, சிதம்பரம்

ஆசிரியர் குழு





# மலருமா...?

கையெறி குண்டுகளுக்கிடையில்
எங்கள் கைக்குழந்தைகள்
உயிரெழுத்துக்கள் கற்றுக்கொடுக்கும்
பள்ளியில் உயிர் வாங்கும் ஆயுதங்கள்
சமாதானம் சொல்லிச் சென்ற எங்களுக்கு
சத்தமில்லாத மரணம் – வெளியில் தெரியாமல்
எங்கள் குழந்தைகளின் விளையாட்டுச் சுதந்திரம்
முள்ளுவேலிக்குள் முடங்கிப் போனது
இனி எங்கள் வீடுகளுக்கிடையில்
கண்ணிவெடிகள் புதைக்கப்படும்
எங்கள் உடலில் சின்னங்களும்
உயிர் போன சடலங்களும்தான்
நாங்கள் சிந்திய குருதி
எங்கள் மண்ணிலே விதைகளாகும்
ஓய்ந்து விட்டதா? – ஈழத்தின் குரல்
ஓய்ந்துவிடுமோ! – ஈழத்தின் குரல்
இல்லை இல்லை அது சத்தியம்
ஓங்கி ஒலிக்கும் ஒருநாள் – விதைகள்
துளிர்விடும் காலம் வெகுதூரமில்லை
அழித்துவிட்டதாக நினைக்கும் புல்லுருவிகள்
இல்லை இல்லை அழியவில்லை – ஆம் ஆம்
வருவோம் நிச்சயம் அன்று மலரும் ஈழம் அது சத்தியம்

ப.பிருந்தா
இளம் வணிக ஆட்சியியல் (நிறை)

கிரிக்கெட்டின்னா சச்சின்
பிரவுசின்னா லவ்லிதான்

Cell : 9443235172

Ph : 04364 - 222517

# LOVELY BROWSING CENTRE

(NOW WITH 2048 kbps BROAD BAND HIGH SPEED CONNECTIVITY)

XEROX 50 PAISE

Laser Print 1/-

- Xerox
- Internet
- E-mail
- DTP
- Scanning
- Colour Print & Laser Print
- Voice Chat & Web Cam.
- CD Writting
- Available CD & Floppy
- All Project Works Done Here.
- Parking & Toilet

Opp : Bus Stand, Hotel Imbala, (Upstair)
Kiliyanur N.M. Zackariya building, Mayiladuthurai 609 001.
Email : Lovelybrowsing@yahoo.co.in






# சிந்தனையின் சித்திரங்கள்



டி.தயானந்தம்
இளம் கணிதம் (இடை)



எஸ்.முத்து
இளம் வேதியல் (இடை)



கோ.புவனேஸ்வரி
இளம் கணினி பயன்பாட்டியல் (முதல்)



கே.பூங்குழலி
இளம் கணினி அறிவியல் (நிறை)



ஆர்.அபிராமி
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

# எங்களின் பிரார்த்தனை

எம் குலத்தோர் பிறந்ததோ – தமிழ்நாடு
கடல் கடந்து வளர்ந்ததோ சிங்களத்திருநாடு
இன்று நாங்கள் அலைவதோ வேலியிட்ட சுடுகாடு
நாங்கள் விழிமூடி உறங்குவது எங்கள் வீடல்ல
கட்டுபாடுகளுடன் கூடிய வன்முறை முகாம்கள்
இந்த முள் வேலிகள் எங்களுக்கு புதிதல்ல
முகாம்களைத் தவிர வேறு வழியில்லை
காக்க வேண்டிய நாடுகள் எய்த்துவிட்டன
இறக்கும் நாளை
எண்ணிக்கொண்டிருக்கிறோம்
இறைவா...
நீயாவது எங்களைக் காப்பாற்று.

**க.ராஜேஷ்**
இளம் நுண்ணுயிரியல் (இறுதி)

# தொட்டு விடும் தூரம்

நிற்கின்ற மேகம்தான் நீர்தரும்
நிலையான மனம்தான் வெற்றிபெறும்
நீ அலைகின்றாய் கிடைக்காத போது
எப்போது நீ எழுகின்றாயோ அப்போது
வெற்றி உன் கையில்
சோதனையின் போது சோர்ந்து விடாதே
உனது சாதனையின் இலக்கு
தொட்டுவிடும் தூரம்தான்
என்பதை மறந்துவிடாதே.

**இரா.ரஞ்சனி**
இளம் நுண்ணுயிரியல் (முதல்)



# தன்னம்பிக்கை



நெஞ்சில்
விழுவன யாவும் அடிகளல்ல
உனது எதிர் காலத்தின்
விடியலை உருவாக்கும்
சிறு பொறிகள்...
கனவுகள் மெய்பட
உன் காரிருள் மனத்தை
வெளிச்சமாக்கு
லட்சியம் என்னும் தீபம்
கொண்டு...
கண்ணில் இருந்து வரும்
உன் கண்ணீர்த் துளிகள் யாவும்
உன் எதிர்காலத்தின்
தடைக்கற்களை கரைக்கும்
கரைப்பான்...
தன்னம்பிக்கையைக்
கை விடாதே என்றும்....



கடவுள் கொடுப்பார் என்று சொல்பவர்கள்
தன்னம்பிக்கை இல்லாத சோம்பேறிகள்.

TATTI

23

TAMILNADU ADVANCED TECHNICAL TRAINING INSTITUTE

Reg.by GOVT.OF TAMILNADU Bound to GOVT.OF INDIA

COMPUTER HIGHER EDUCATION

COMPUTER TRAINING

- Experienced Instructors
- Equipped Labs
- Excellent Curriculum and Materials

DIPLOMA COURSES

PGDCA (one year / 6 months)
HDCA (one year)
HDHT (Hardware with Networking)

PROJECT COURSES

- J2EE + Session
- .Net + Session

CERTIFICATE COURSES

- Tally (Advanced)
- AUTOCAD (Latest)
- Photoshop, Pagemaker
- Adope Premiere, Flash
- MS - Office



Click Start your IT career ...

Keep in touch, (Prof: Jo. G.Nedunchezhiyan)

13-D, IInd Floor, Cutchery Road,
Mayiladuthurai - 609 001.
☎: 241129 Cell :9865092034, 9842381199
H.O: Gee.Gee. Complex, 42/25, Anna Salai, Chennai - 2.






## நாம் ஒருவர்

நாம் இரு வேறு தாய்க்குப்
பிறந்திருந்தாலும்
நட்பு எனும் தாய்க்கு
ஒருவரே

பூமியில் மலரும் பூக்கள்
அனைத்தும் ஒரு நாள் உதிரும்
ஆனால் என்றென்றும்
உதிராது நட்பு

தூண்டிலில் சிக்கிய மீனும்
உன் அன்பில் சிக்கிய நானும்
துடிப்பது நிஜம்
மீன் துடிப்பது வாழ்வதற்கு
நான் துடிப்பது நட்புக்கு

ஆயிரம் கோடி நட்சத்திரங்கள் விண்ணில் இருந்தாலும்
இரவில் வானத்திற்கு அழகு நிலவுதான்
ஆயிரம் உறவுகள் மண்ணில் இருந்தாலும்
வாழ்க்கைக்கு அழகு நல்ல நட்புதான்

நட்பு எனும் ரோஜாவை
பிரிவு எனும் நச்சு
கிள்ளியதால்
மனம் எனும் செடி
வாடியது.

இரா.சித்ரா
இளம் தமிழ் (நிறை)



கவிதை என்பது யோசிப்பது
காதல் என்பது நேசிப்பது
நட்பு என்பது சுவாசிப்பது
யோசிக்காமல் நேசிக்காமல்
இருக்க முடியும் ஆனால்
சுவாசிக்காமல் இருக்க முடியுமா?

ரா.புஷ்பா
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

# ஐக்கூ கவிதைகள்

## அம்மா

கனவுகளின் உறைவிடம்
உயிரின் பிறப்பிடம்
கடவுளின் மறுஉருவம் அம்மா.

## பால்புட்டி

பாலும் பசியும் தீர்ந்தது
குழந்தைக்கு விளையாட்டு
பொருளாயிற்று பால்புட்டி.

## கைப்பேசி

காலமோ கலியுக காலம்
சாலையோரம்
விநோத பைத்தியங்கள்
கைப்பேசியுடன்.

## விதவை

வெள்ளை உடை
அணிந்தவளுக்கு
வெள்ளைப் பூ வைக்க
தடை...

## புன்னகை

பொதி சுமக்கும்
கழுதை சிரித்தது...
முதுகில் சுமையோடு
பள்ளிக்குப் போகும்
குழந்தை...

செள.சத்தியநாராயணன்
இளம் தாவரவியல் (இடை)





## தேவைதானா?

நாட்டில் பல மக்களுக்குப்
பாதுகாப்பில் கிடைக்கயாக
சுதந்திர தினம்...

தொழிலாளர்கள் போராட்ட ம்
தினம் தினம் இருந்தும்
தொழிலாளர் தினம்...

நீதிமன்ற வாசலில் நீண்ட வரிசை
விவாகரத்து வேண்டி - இருந்தும்
காதலர் தினம்...

காடுகள் வீடுகளாக மாறிய நேரத்தில்
உழவன் எங்கே என்று தேடும் நேரத்தில்
உழவர் தினம்...


விபத்துக்கள் குறையாத சாலைகள்,
சாலைகளே இல்லாத கிராமங்கள் இருந்தும்
சாலை பாதுகாப்பு தினம்...

தேவைதானா?
இத்தகைய தினங்கள்...

மா.மதிவாணன்
முது வேதியல் (முதல்)

இப்பொழுது வேறு எங்கும் கிடைக்காத
மிக குறைந்த விலையில்

LG intello air™ AIR CONDITIONERS | Art flower splits



- அனைத்தும் இந்திய அரசு மின் சிக்கனத்தை வலியுறுத்தி அறிவுறுத்தியுள்ள ஸ்டார் ரேட்டிங் A/C's
- ஐந்து வருட கம்பரஸர் வாரண்டி 0.75 Ton 30 Ton வரை
- பல்வேறு கலர் பேனல் மாடல்.
- 0% பைனான்ஸ் வசதி மற்றும் துரித சர்வீஸ் வசதி.

LG Electronics (I) - companyயின்
அங்கீகாரம் பெற்ற Distributer :

சிவசக்தி ஏஜென்ஸி

34,A/5, பட்டமங்கலத் தெரு, (அர்பன் பேங்க் சந்து),
மயிலாடுதுறை–1.

சேல்ஸ் - சர்வீஸ் - ஸ்பேர்ஸ்

போன்: 04364-227133 செல்: 9443187562 / 9360521480






# கடிகாரத்தின் வரலாறு


நேரத்தை அறிவதற்கான கருவியே கடிகாரம் என்பதை அனைவரும் அறிவோம். கை மணிக்கட்டில் கட்டப்படுவது கைக்கடிகாரம் என்பதும் தெரிந்ததே. ஆங்கிலச் சொல்லான "ரிஸ்ட்" (Wrist) என்பது தமிழில் "மணிக்கட்டு" என வழங்குவது மிகவும் பொருத்தமன்றோ? இன்று கடிகாரம் பிரிக்க முடியாது ஓர் உறுப்பாக விளங்குகிறது என்றால் அது மிகையன்று. கடிகாரம் இன்றி, நேரம் பற்றிய உணர்வு இன்றி யாராவது வாழ இயலுமா? தவறான நேரத்தைக் காட்டும் பழுதுபட்ட கடிகாரத்தை நம்பினால் குறித்த காலத்தில் பணிக்குச் செல்ல இயலாது. பயணம் செய்ய வேண்டிய பேருந்து, ரயில், விமானம் ஆகியவற்றைத் தவற விடுவோம். எனவே கடிகாரம் காட்டும் நேரத்தை நம்பியே மனித வாழ்க்கை முறையாக செல்கிறது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

நாகரிக முதிர்ச்சியின் ஒரு கட்டமாக நேரத்தை அளவிடும் முறை மனிதனால் கண்டுபிடிக்கப்பட்டது. மிகப்பழங்காலத்தில் சூரியனின் இயக்கத்தையும் அதன் விளைவாக நிகழும் நிழல்களின் நகர்வையும் அடிப்படையாகக் கொண்டு நேரம் அளவிடப்பட்டது. வரலாற்றில் முந்தைய காலத்தில் சுமேரியர்கள் நேரத்தை அளவிட முயன்றதாகவும் இதில் முன்னோடிகளாக விளங்கியவர்கள் அவர்களே. சுமேரிய நாகரிகமே ஒரு ஆண்டை மாதங்களாகவும், நாட்களாகவும் ஒரு நாளை பல கூறுகளாகவும் பிரித்த என்று கூறப்படுகிறது.

காலப்போக்கில் அரேபியர்கள் தமது சொந்த முறைகளைக் கையாண்டு சூரியன் நகர்வதைப் பின்பற்றி 24 பெரிய கம்பங்களை வட்டப் பாதையில் நிறுவினர். இந்த முயற்சி பல்வேறு நகரங்கள் வாயிலாகப் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டது.

இப்பொழுது வேறு எங்கும் கிடைக்காத
மிக குறைந்த விலையில்

LG intello air™ AIR CONDITIONERS | Art flower splits



- அனைத்தும் இந்திய அரசு மின் சிக்கனத்தை வலியுறுத்தி அறிவுறுத்தியுள்ள ஸ்டார் ரேட்டிங் A/C's
- ஐந்து வருட கம்பரஸர் வாரண்டி 0.75 Ton 30 Ton வரை
- பல்வேறு கலர் பேனல் மாடல்.
- 0% பைனான்ஸ் வசதி மற்றும் துரித சர்வீஸ் வசதி.

LG Electronics (I) - companyயின்
அங்கீகாரம் பெற்ற Distributer :

சிவசக்தி ஏஜென்ஸி

34,A/5, பட்டமங்கலத் தெரு, (அர்பன் பேங்க் சந்து),
மயிலாடுதுறை–1.

சேல்ஸ் - சர்வீஸ் - ஸ்பேர்ஸ்

போன்: 04364-227133 செல்: 9443187562 / 9360521480






# கடிகாரத்தின் வரலாறு

நேரத்தை அறிவதற்கான கருவியே கடிகாரம் என்பதை அனைவரும் அறிவோம். கை மணிக்கட்டில் கட்டப்படுவது கைக்கடிகாரம் என்பதும் தெரிந்ததே. ஆங்கிலச் சொல்லான "ரிஸ்ட்" (Wrist) என்பது தமிழில் "மணிக்கட்டு" என வழங்குவது மிகவும் பொருத்தமன்றோ? இன்று கடிகாரம் பிரிக்க முடியாது ஓர் உறுப்பாக விளங்குகிறது என்றால் அது மிகையன்று. கடிகாரம் இன்றி, நேரம் பற்றிய உணர்வு இன்றி யாராவது வாழ இயலுமா? தவறான நேரத்தைக் காட்டும் பழுதுபட்ட கடிகாரத்தை நம்பினால் குறித்த காலத்தில் பணிக்குச் செல்ல இயலாது. பயணம் செய்ய வேண்டிய பேருந்து, ரயில், விமானம் ஆகியவற்றைத் தவற விடுவோம். எனவே கடிகாரம் காட்டும் நேரத்தை நம்பியே மனித வாழ்க்கை முறையாக செல்கிறது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.


நாகரிக முதிர்ச்சியின் ஒரு கட்டமாக நேரத்தை அளவிடும் முறை மனிதனால் கண்டுபிடிக்கப்பட்டது. மிகப்பழங்காலத்தில் சூரியனின் இயக்கத்தையும் அதன் விளைவாக நிகழும் நிழல்களின் நகர்வையும் அடிப்படையாகக் கொண்டு நேரம் அளவிடப்பட்டது. வரலாற்றில் முந்தைய காலத்தில் சுமேரியர்கள் நேரத்தை அளவிட முயன்றதாகவும் இதில் முன்னோடிகளாக விளங்கியவர்கள் அவர்களே. சுமேரிய நாகரிகமே ஒரு ஆண்டை மாதங்களாகவும், நாட்களாகவும் ஒரு நாளை பல கூறுகளாகவும் பிரித்த என்று கூறப்படுகிறது.

காலப்போக்கில் அரேபியர்கள் தமது சொந்த முறைகளைக் கையாண்டு சூரியன் நகர்வதைப் பின்பற்றி 24 பெரிய கம்பங்களை வட்டப் பாதையில் நிறுவினர். இந்த முயற்சி பல்வேறு நகரங்கள் வாயிலாகப் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டது.

கி.மு 320-ல் கிரேக்க நாட்டில் தண்ணீரைப் பயன்படுத்தி நேரத்தை அளவிடும் முறை வழக்கத்தில் இருந்து வந்தது. ஒரு சாதனத்தில் தண்ணீர் ஒவ்வொரு துளியாக ஒரு கல் பாத்திரத்தில் விழுமாறு அமைக்கப்பட்டது. நிரப்பப்பட்ட தண்ணீரின் அளவைக் கொண்டு நேரம் அளவிடப்பட்டது.

கி.பி. 1510 ஆம் ஆண்டு ஜெர்மன் நாட்டைச் சார்ந்த பூட்டு செய்யும் தொழிலாளியான பீட்டர் ஹென்லின் என்பவர் நேரத்தைக் காட்டும் நிலையான டச்சு நாட்டு தொழில்நுட்ப வல்லுநர் ஹியூஜன்ஸ் என்பவர் ஊசல் (Pendulum) அசைவில் இயங்கும் கடிகாரம் ஒன்றை உருவாக்கி நேரத்தை அளவிடும் முயற்சியில் வெற்றிபெற்றார்.

இவர் ஒரு நாளை 24 மணிகளாகவும் ஒரு மணியை 60 நிமிடங்களாகவும் ஒரு நிமிடத்தை 60 வினாடிகளாகவும் பாகுபாடு செய்தார். புதிய முறைகளைப் பயன்படுத்திக் கடிகாரத்தையும் மேம்படுத்தினார்கள்.





கற்காத கல்வியும், மதிக்காத பொருளையும்
வழங்காத தானமும், வணங்காத பெற்றோர்களையும்
அறியாத சொத்துக்களையும் – எவன் தவற விட்டானோ
உயிருள்ள பிணத்திற்கு சமம்.





# அன்புடன்...



தாய் தந்தையை நேசிப்பேன்
என் உயிர் உள்ளவரை...
ஆசானை நேசிப்பேன்
என் நினைவு உள்ளவரை...
உடன்பிறப்பை நேசிப்பேன்
என் உடல் உள்ளவரை
தோழர்களை நேசிப்பேன்
என் வெற்றி வாசல் வரும் வரை...
மலரும் பூக்களை நேசிப்பேன்
என் பார்வை உள்ளவரை...
காதலை நேசிப்பேன்
என் மனம் அழகாய் உள்ளவரை...
நட்பை நேசிப்பேன்
என் நம்பிக்கை வாழ்க்கையில் உள்ளவரை
மனைவியை நேசிப்பேன்
என் வாழ்நாள் உள்ளவரை...
மகனை நேசிப்பேன்
என் இறுதிப் பயணம் முடியும்வரை
கடவுளை நேசிப்பேன்
என் இறுதிப் பயணம் வெற்றியடைய...

எஸ்.ஏ.ராஜ்

ஜெய் ஹிந்த்




உன் தியாகத்தை
இந்த தேசம் மறந்தாலும்
மறுத்தாலும் உன் நினைவில்

APPLE MOBILES

All type of Mobiles

SALES & SERVICE

19, M.M.R. Complex, Catcherry Road,
Mayiladuthurai - 609 001.
Cell : 9976004006, 9600456932






# செம்மொழித் தமிழுக்கு கோவையில் ஒரு மகுடம்...

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே
வாளொடு முன் தோன்றிய மூத்தக்குடி"

பேசிய மொழி தமிழ். இதனை அமுதென்பார் பாவேந்தர்.

### உயர்தனிச் செம்மொழிகள்

கிரீக்கு, இலத்தீன், ஈப்ரு (எ) எபிரேயம், சீனம், சமஸ்கிருதம், தமிழ் என ஆறினை உயர்தனிச் செம்மொழிகளாக அறிவிப்பர் மொழியியாலர். அவற்றுள் இன்றவும் வாழும் மொழிகளாகத் தமிழையும் சீன மொழியையும் குறிப்பிடுவர்.

### செம்மொழிக் கோரிக்கை

தமிழைத் திராவிட மொழிகளின் தாய் என்று முதன் முதலில் ஒப்பாய்வின் வழி அறிவித்தவர் டாக்டர் கால்டுவெல் ஆவார். தமிழ் உலகத்தின் தாய்மொழி என்பது பாவாணரின் கருத்து. தமிழைச் செம்மொழிகளில் ஒன்று என்று இந்திய அரசு அறிவிக்கப் பரிதிமாற் கலைஞர் தொடங்கித் தமிழத்தின் தற்போதைய முதல்வர் டாக்டர் கலைஞர் வரை பல்வேறு காலங்களில் பல்வேறு தரப்புகளிலிருந்து கோரிக்கை எழுந்தது. நிறைவாக 2004 ஆம் ஆண்டில் இக்கோரிக்கை நிறைவேறியது.

### செம்மொழிப் பண்புகள்

தொன்மை, தனித்தியங்கும் தன்மை, இலக்கண இலக்கிய வளம் எனும் மூன்று முதன்மைத் தகுதிகளாக மொழியியல் வல்லுநர்கள் அறிவித்த செம்மொழித் தகுதிகளை விரித்து இவற்றுடன் பொதுமைப் பண்பு, நடுநிலைமை, பல மொழிகளுக்குத் தாய், பட்டறிவு,

பிறமொழித் தாக்கமின்மை, உயர்சிந்தனை, கலை இலக்கியத் தன்மை வெளிப்பாடு, பங்களிப்பு, மொழிக்கோட்பாடு எனும் பதினொன்றாக எடுத்துரைப்பர் மணவை முஸ்தபா உள்ளிட்ட தமிழறிஞர்கள்.

**உலகத்தமிழ் மாநாடுகள்**

1. (மலேசியா) கோலாலம்பூர் (1966)
2. சென்னை (1968)
3. (பிரான்ஸ்) பாரீஸ் (1970)
4. (இலங்கை) யாழ்ப்பாணம் (1974)
5. மதுரை (1981)
6. (மலேசியா) கோலாலம்பூர் (1987)
7. மொரீசியஸ் (1988)
8. தஞ்சாவூர் (1995)

என்று இதுவரை எட்டு இடங்களில் உலகத்தமிழ் மாநாடுகள் நடத்தப்பெற்றுத் தமிழின் பெருமை பறை சாற்றப்பட்டுள்ளது.

**முதல் தமிழ் செம்மொழி மாநாடு**

தமிழன்னைக்கு மேலும் ஒரு மகுடம் சூட்டி மகிழும் வண்ணம் செம்மொழித்தகுதியை இந்திய அரசு அறிவித்தபிறகு வரும் ஜூன் மாதம் 23 முதல் 27 வரை கோவை மாநகரில் கூட்டப்பெறும் முதல் மாநாடு. உலகத் தமிழ் மாநாடுகள் கூட்டிய பிறகு கிடைத்த நன்மைகளும் குறிப்பிடத்தக்கது உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகும்.

**எதிர்பார்ப்பு**

செம்மொழித் தமிழுக்கு மாநாடு கூட்டப்பெற்றிருக்கும் இவ்வேளையில் தமிழைத் தமிழகத்தின் அனைத்துறைகள் மட்டுமன்றி இந்தியாவின் ஆட்சி மொழியாகவும் அறிவிக்க வேண்டும் என்னும் கோரிக்கை வலுப்பெற்றுள்ளது. இது மட்டுமன்றிச் செம்மொழித் தமிழுக்கு இன்னும் பல நன்மைகள் கிடைக்கப்போவது உறுதி. பொறுத்திருந்து பார்ப்போம்.

ஆசிரியர் குழு





## பணிப்பட்டறை

பரவசமூட்டும் பள்ளியை முடித்து
எடுத்து வைக்கும் முதல் அடி
சொர்க்கத்தின் அருகில்
வியந்தேன்! ரசித்தேன்
தேன் கூட்டின் சுவையோ!
எனது ஆசான்கள் என்று
அள்ளிப் பருக ஆசை
குடித்தேன் ஆசை தீரும் வரை
ஆசை தீரும் முன்னே
என் கல்லூரியின் கதவுகள்
மூடப்படுவது கண்டு துடித்தேன்
அதற்குள்ளா முடிந்துவிட்டது
என் மூன்றாண்டு
பணிப்பட்டறை.

ரா.சிவராமன்
இளம் கணிதம் (நிறை)

## உணர்வு

இனிக்கும் தென்றலாய்
இதய வருடலாய்த்
திடுமென என்மேல்
மையல்கொண்டு
காதல் காற்று வீசுகிறாய்
உன்னுள் வருவதா
நீ
என்னுள் வருவாயோ
எனப் போராட்டம் நீடுக்கே
வந்துவிட்டாய்
நலமாய்!

## நகைச்சுவை

அம்மா : ஏண்டா... மாஸ்டர் பாடம் நடத்தும் போது தூங்கினியா?

பையன் : இல்லைம்மா... மாஸ்டர்தான் நான் தூங்கின தெரியாம பாடம் நடத்தினார்

அம்மா : ??

எம்.ரசிகா
இளம் நுண்ணுயிரியல் (...)

A Traditional Leading Dealer in Branded Watches & Mobiles

STR SINCE 1942

LION. K.SENTHIL RAJAN @ KAVI
District Chairperson
Mobile : 9442275977

# ராஜன்

TITAN SHOPPE
வாட்ச்
149F,காந்திஜி ரோடு.
☎ : 04364 - 222140

WATCH Care
வாட்ச் கேர்
Authorised Service Centre
149 A/2, காந்திஜி ரோடு. ராஜன்வாட்ச் மாடியில்
Ph : 04364 - 225140.

NOKIA Prime GALLERY
மொபைல்ஸ்
30,கச்சேரி ரோடு.
☎ : 04364 - 225572

MOBILE Care
மொபைல் கேர்
Authorised Service Centre
32, கச்சேரி ரோடு,
Ph : 9791835658

NOKIA Shop N Shop
மொபைல் ஸ்டோர்
127/109,பட்டமங்கலத்தெரு
☎: 04364 - 229995

SHAKTHI AGENCIES
Authorised Distributor
VIDEOCON ORAGE MAXX
Mobile Phones
149 A/3, காந்திஜி ரோடு. ராஜன்வாட்ச் மாடியில்
Ph : 04364 - 225140. Cell : 9442275977

மயிலாடுதுறை

Approved & Authorised by
OKIA India (P) Ltd., TITAN Industries Ltd.,






## அன்னையும் நானும்



பத்து மாதக் கருவறை இருளை
விலக்கி என்னை இந்த – உலகின்
வெளிச்சத்தைக் காணச் செய்தவள்
நான் வெளிச்சத்தைக் கண்டதிலிருந்து
கண்முடுவதையே மறந்தவள்
தன் சுகமான உறக்கத்தில்
என் பாதங்கள் பூமியில் படும்வரை
தன் இடைகளைப் பஞ்சு மெத்தையாக்கியவள்
தன் உணவை மறந்து,
தன் குருதியைப் பாலென்னும்
தேனாக்கி ஊட்டிய அன்னை
எனது அசைவுகள் அனைத்தையும்
ரசித்துப் பசுமரத்தாணி போல் நெஞ்சினில்
பூட்டிக்கொண்டு தனக்குள்ளே இன்புற்றவள்
ஆண்டாண்டு காலம் கடந்தாலும்
அன்னை என்ற உறவுக்கு ஆயுசு நூறுதான்!
நீரின்றி அமையாது உலகு
அது வள்ளுவன் வாக்கு
தாய் இன்றி நான் ஏது உலகுக்கு
இது இறைவன் வாக்கு!

அ.நடராஜன்
முதுகலைத் தமிழ்(நிறை)

J.பாஸ்கரன்
Ph : (04364) 220718
Cell : 9865003327
9443559053



- டிஜிட்டல் ஆல்பம்
- போட்டோ லேமினேசன்
- டிசைனிங் & மிக்ஸிங்
- டிஜிட்டல் போட்டோஸ்
- பழைய படங்களை கலர் படங்களாக மாற்றுதல்.
- VHS to CD & DVD யாக மாற்றுதல்.
- திருமணம் மற்றும் சகல விசேஷங்களுக்கு கலர் போட்டோ & மிக்ஸிங் வீடியோ கவரேஜ் சிறந்தமுறையில் செய்து தரப்படும்.

விஷ்வல்

ஸ்டுடியோ & வீடியோ

நெ.3, ஜெய்வின் காம்ப்ளக்ஸ்(பாலக்கரை அருகில்)
மயிலாடுதுறை – 609 001.





# மூளையின் முன்னேற்றப் பாதையில் அறிவியல்


மூளை நம்மை இயக்கும் அதிகாரி. மூளையின் ஒரு செல் பாதிக்கப்பட்டாலும் அது தொடர்பான உடல் உறுப்புகளின் இயக்கம் பாதிக்கப்படும். மூளை செல்லும் முக்கியமானவை.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த மூளை செல்லை (நியூரான்) செயற்கையாக வளர்த்து விஞ்ஞானிகள் சாதனை புரிந்துள்ளனர். நியூரான் என்பது மூளைக்கும், உடலுக்கும் தகவலைக் கடத்தும் செல் ஆகும். அமெரிக்காவில் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள ஸ்டான்போர்டு பல்கலைக்கழக மருத்துவப்பள்ளி ஆய்வுக்குழுவினர் இந்த நியூரான் செல்லை உருவாக்கி உள்ளனர். உடலின் தோல் பரப்பின் அடியில் உள்ள செல்லைக் குறிப்பிட்ட மூன்று அணுக்களைக் கொண்டு முடுக்கிவிட்டு நியூரான் செல்லாக மாற்றி உள்ளனர். இது வழக்கமான நியூரான்கள் போல உணர்வுகளைக் கடத்துவதில் சிறப்பாகச் செயலாற்றுகிறது. ஒரு வாரத்தில் 20% அளவில் வேலைகளை வெற்றிக்கரமாகச் செய்யும் வகையில் முன்னேறியது. இதற்கு முன்னோடியாகச் செல்களின் குறிப்பிட்ட வைரசை உட்செலுத்தி மாற்றங்களை ஏற்படுத்தி நியூரான்களைப் போல செயல்பட வைத்தனர். வெற்றி கிடைத்த பின்னரே மனிதனில் சோதித்துப் பார்க்கப்பட்டது. இதன் உற்பத்தி விஞ்ஞான உலகில் இனம்புரியா சாதனையாகத் திகழ்கிறது. குறிப்பிட்ட செல்களை வேறுவகை செல்களாக மாற்றமுடியும் என்பது இந்த ஆய்வின் மூலம் உறுதி செய்துள்ளதால் பல நோய்களுக்குத் தீர்வு காணப்படும் என்று நம்பிக்கை பிறந்துள்ளது.

மனநிலை பாதிக்கப்பட்டவர்கள், அல்சைமர், பார்கின்சன் போன்ற ஞாபக மறதி போன்ற மூளை சம்பந்தப்பட்ட பல்வேறு நோய்களுக்கு எதிர்காலத்தில் இந்த நியூரான் செல்கள் மூலம் தீர்வு காணமுடியும்.

மூளையின் முன்னேற்றப் பாதையில்
முடங்கிக் கிடக்கும் இந்தியாவை
முன்னேற்ற முயலுவோம்.

ஜெ.ஜெயகுமார்
கணினி மேலாண்மை (முதலாமாண்டு)



# அன்னை

## பர்னிச்சர் மார்ட்

அனைத்து வகை மர, ஸ்டீல், பிளாஸ்டிக் பர்னிச்சர்களுக்கும், **DURO FLEX, KURL - ON** மெத்தைகள், கம்ப்யூட்டர்களுக்கு தேவையான பர்னிச்சர்கள் லட்சுமி, சாந்தா, அமிர்தா, அல்ட்ரா கிரைண்டர், மிக்ஸி, ஃபேன்கள் போன்ற அனைத்தும் வாங்கிட அன்புடன் அழைக்கின்றோம்

**140, காந்திஜி ரோடு,**

**மயிலாடுதுறை - 609 001.**

**போன் : 222946**






# படம் பார்த்துக் கவிதை வரைக...



ஆசிரியர் குழு

ஸ்தாபகம் : 1973


☎ : 226065
Cell : 9443246065

# ஞானம் ஆனந்த்

## லைட் & ஹெவி டிரைவிங் ஸ்கூல்

(அரசு அங்கீகாரம் பெற்றது)

நெ. 2 ரோடு, கல்லறைதோப்பு தெரு,
மயிலாடுதுறை - 609 001.



கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக கார், மாருதி கார், ஜீப், லாரி, மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்களில் சிறந்த முறையில் ஓட்டுநர் பயிற்சியளித்து ஓட்டுனர் உரிமம் பெற்றுத்தரும் கைராசி ஸ்தாபனம்.


Prop : **G.ரவிசங்கர்** **G.ரகுராமன்** D.A.E.

குறிப்பு : பெண்களுக்கு மாருதி காரில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.




## வீர கிளைகளுக்கு...

கற்றல் மிகு கிளைகளே
அறிவு செறிந்த கிளைகளே
அச்சு முறிந்த பாரதத்தின்
சக்கரத்தைச் சுழற்றிட
வீறுகொண்டு எழுவாய்
விண்ணையும் நீ தொடுவாய்
நிலவைப் போன்ற தூய்மையும்
தாயைப் போன்ற தன்மையும்
மரணம் கண்முன் தோன்றிலும்
பயமறியா உள்ளமும்
அணிகலனாய் அணிவாய்
மாவீரனாகத் திகழ்வாய்
ஞானமே உன் வாளாக
தியாகமே கவசமாக
அண்ணல் காந்தி வழியில்
அழகுநடை புரிவாய்.



பா.கணேசமூர்த்தி
இளம் வணிகவியல் (முதல்)



# திரைப்படத் தொகுப்பாளர் திரு.பி.மர்ஃபி அவர்களுடன் ஓர் இனிய சந்திப்பு...



எமது கல்லூரியின் காட்சித்தகவியல் துறைக் கருத்தரங்கிற்கு வருகை தந்த திரைப்படத்துறையின் இளம் சாதனையாளர் மர்ஃபி அவர்களுடன் இளந்தூது குழுவினர் நேர்கண்ட போது...

**இளைஞர்களின் தற்போதைய நிலை என்ன?**

இளைஞர்களை வழிநடத்த சிறந்த தலைவர்கள் தற்போது இல்லை. குதிரை தன்னுடைய திசையினை நோக்கி வேகமாகச் செல்லுவதற்கு கடிவாளம் எவ்வளவு முக்கியமோ அதுபோல் இளைஞர்களை வழி நடத்த நல்ல தலைவர்கள் இல்லை. தொலைக்காட்சி மற்றும் சினிமா பார்த்து அதிக நேரம் வாழ்க்கையினை வீணாடித்துக் கொண்டு இருக்கிறார்.

**திரைப்படத்துறையைத் தேர்ந்தெடுக்க காரணம் என்ன?**

சிறு வயதிலே சினிமாத்துறையில் இடம் பெற வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வம் தான் பார்க்கும் ஒவ்வொரு பாடமும்





முன்மாதிரிகளாக இருந்தன. எனது பெற்றோரும் அதற்கான உதவிகளைச் செய்துகொடுத்தனர்.

**விவசாயம் நாட்டின் முதுகெலும்பா?**

விவசாயம் குறைந்துகொண்டு வருகிறது. காரணம் எல்லா பகுதிகளிலும் கான்கீரிட் வீடுகள் அதிகம் கட்டப்படுகின்றன. இந்தப் பாதிப்பு அடுத்த தலைமுறையினை மோசமாக பாதிக்கும். இவற்றின் விளைவுதான் நாட்டின் அரிசி பற்றாக்குறை.

**உங்களின் இலக்கு?**

தற்போதைய சூழ்நிலையற்ற படத்தை உருவாக்க வேண்டும். நல்லதொரு திரைப்பட தயாரிப்புகளாக இருந்தது. அனைத்து காட்சிகளும் சொந்த படைப்பில் உருவாக்க வேண்டும்.

**மாணவர்களுக்குச் சொல்ல விரும்புவது?**

எதனையும் செய்ய முடியும் என்ற உணர்வினை வளர்த்துக் கொள்ள வேண்டும். இலக்கியத்தின் படி சொல்லப்பட்ட செய்திகளே போதுமானது. அதில் சொல்லிய உயர்ந்த கருத்துக்களைப் பின்பற்றி வாழ்வது நல்லது.

**மாணவர் இதழ் குறித்து?**

மாணவர் இதழினை ஊக்குவிக்க வேண்டும். இலக்கியம் முக்கியமானது போல, சிறுகதைகள் நிறைய படிக்க வேண்டும். அவற்றிலுள்ள ஒவ்வொரு வரிகளையும் நேசிக்க வேண்டும். தங்கர்பச்சானின் ஒரு கவிதை வரியில் வெள்ளைமாடு எனும் தொகுப்பில் ஒரு நாள் வேலையிலையும் கடினமானது சினிமாத் துறையே என்றார்.

**உங்கள் விருதினைப்பற்றி?**

சிறந்த தொகுப்பாளர் என்ற விருதினைப் பெற்ற போது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். என்னுடைய முதல் விருதினை 25 வயதில் பெற்றேன்.

அசிரியர் குழு


ESTD 1962

Ph : 241660

JRS J.ராஜகோபால் & சன்ஸ்
ஸ்டவ் & ஆப்டிகல்ஸ்

B.O : 7, நாராயணபிள்ளை தெரு, J.R.S.காம்ப்ளக்ஸ், மயிலாடுதுறை.
H.O : 184, நெ.2 ரோடு, கூறைநாடு, மயிலாடுதுறை. Ph : 223316

எங்களிடம் எல்லா விதமான கியாஸ் ஸ்டவ்,
கியாஸ் லைட், பம்ப் ஸ்டவ், திரி ஸ்டவ், குக்கர்,
மிக்ஸி சேல்ஸ் & சர்வீஸ் செய்துதரப்படும்.





கண்களை பரிசோதனை செய்து கண்ணாடி
போடப்படும். டாக்டர் சீட்டுக்கு தகுந்த கண்
கண்ணாடி கிடைக்கும்.

JRS J.ராஜகோபால் & சன்ஸ்
J.R.S.ஆப்டிகல்ஸ்

N.B.O : 192/2 G.H.ரோடு,
G.H.எதிரில்,
மயிலாடுதுறை -1.
Ph : 241708

K.B.O : 19 A, பிரசன்ன
மாரியம்மன் சன்னதி,
மயிலாடுதுறை -1.
Ph : 228218





# நகைச்சுவைகள்



மனைவி : இந்தக் குடும்பத்து நாயா உழைக்கறேன்னு அடிக்கடி சொல்லிக்கிட்டே இருப்பீங்களே...

கணவன் : ஆமாம்.... அதுக்கென்ன?

மனைவி : உங்களைப் பிடிச்சுக்கிட்டு போக நாய் வண்டி வந்திருக்கு..

கணவன் : ???

எம்.ரசிகா
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

அப்பா : ஏண்டா நாய் படம் போட்டுட்டு வாய் மட்டும் வரையாம வச்சிருக்கே

பிள்ளை : அது வாயில்லாத பிராணி....

அப்பா : ???

ஆசிரியர் : ஏண்டா பக்கத்துப் பையனைப் பார்த்து பார்த்து எழுதுற?

மாணவன் : அப்பாதான் பரீட்சையைப் பார்த்துப் பார்த்து எழுதுன்னு சொன்னார் சார்...

அப்பா : ???

நோயாளி : ஐயா எனக்கு 3 மாதமா கடுமையான இருமல்

மருத்துவர் : அப்படியா? சும்மாவா இருந்தீங்க

நோயாளி : இல்லிங்கையா இருமிகிட்டுதான் இருந்தேன்

மருத்துவர் : ???

எம்.சசிகலா
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

ஓவியர் K. சங்கரின்

அட்ஷயா

கிராபிக்ஸ்

ஆப்செட் பிரிண்டிங்
திருமண அழைப்பிதழ்கள்
மல்டிகலர் விசிட்டிங்கார்டுகள்

டிஜிட்டல் பேனர்கள்
வாழ்த்து மடல்கள்
ஆர்ட்ஸ்
ஷீல்டுகள்
அக்ரிலிக் எவர்சில்வர்
பித்தளை எழுத்துக்கள்
ஸ்டிக்கர்ஸ்

1/108, வள்ளலார் மாளிகை, ராமு பெனிபிட்பண்டு எதிரில்
மெயின்ரோடு, செம்பனார்கோவில்
போன்: 04364-323710 செல்: 9655131210



கண்தானம் செய்வீர்! JAI-HIND இரத்ததானம் செய்வீர்!
ஸ்ரீ மகாவீர் ஸ்வாமி நம!
நம்பிக்கை! நாணயம்!! கைராசி!!!

ஸ்ரீ மஹாராஜா
ஜுவல்லர்ஸ்

ஸ்ரீ மஹாராஜா பைனான்ஸ்
ஸ்ரீ மஹாராஜா கைலாஷ்
பெனிஃபிட் பண்ட் லிட்.,

ஸ்ரீ மஹாராஜா P.C.K ஜெயின் அறக்கட்டளை

உடல் ஊனமுற்றவர்கள் உதவி மற்றும் கண்தானம், இரத்த தானம்
ஆகியவற்றிற்கு கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
18/5, காந்தி சாலை, மயிலாடுதுறை – 609 001.
Ph : 222979, 224979 Cell : 9443234979

SETH P.C.JAIN COLLEGE
Maharaja Palace, Pisangan
AJMER Dist. Rajasthan.

CHAIRMAN : LION MJF P.C.KAILASH CHAND JAIN

ஆர்டரின் பேரில் 916 KDM நகைகள் செய்துதரப்படும்.

# 21 ஆம் ஆண்டு










ஏ.வி.சி. கல்லூரி மாணவர் இதழ்

# பணிப்பட்டறை







# மகாத்மா
## பாராமெடிக்கல் கல்லூரி



Run by
Sri Ram Educational & Charitable Trust
Govt Reg. No.186/08
Approved by
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி,
BSS - NDA GOVT OF INDIA
IPH & H - NEW DELHI

**100% QUALITY EDUCATION**

DONATE BLOOD & EYE — BEFORE & AFTER LIFE

Courses :
- DMLT (Dip in Medical Lab Technology)
- DNA (Dip in Nursing Assistant)
- DHA (Dip in Health Assistant)


படிப்பு காலம் : 1 வருடம் மற்றும் 2 வருடம்.
தகுதி : 10th Pass, +2 Pass/Fail, Any Degree

சிறப்பு அம்சங்கள் :
- கம்ப்யூட்டர் பயிற்சி நிலையம்.
- மருத்துவ பரிசோதனை ஆய்வுக்கூடம்.
- அனுபவம் பெற்ற மருத்துவர்களின் ஆலோசனை.
- இலவச மருத்துவ முகாம்கள்.
- மருத்துவத்துறையில் அனுபவம் பெற்ற ஆசிரியர்கள்.

தொடர்புக்கு :
முதல்வர்
**மகாத்மா பாராமெடிக்கல் கல்லூரி**
The Best Educational Service Gold is Gold Awarded Institute
54, கணேஷ் காம்ப்ளெக்ஸ், கச்சேரி ரோடு,
தலைமை தபால் நிலையம் அருகில்
மயிலாடுதுறை - 609 001.
செல் : 9443444945, 9976821094 ஆபிஸ் : (04364) 322376
கிளை நிறுவனம்: சிதம்பரம்.




யார் இவர்கள் ?



PH : 04364 - 227990
Cell : 9842684248

RR

# ENGINEERING WORKS

Undertaking all type of Iron Works

Prop : **R.Elavarasan**

(OPP : A.V.C COLLEGE )
MAIN ROAD, MANNAMPANDAL,
MAYILADUTHURAI,
NAGAI DIST. PIN : 609 305.





## வாழையின் மகத்துவம்

- வாழைப் பழத்திற்கு இளகும் தன்மை உண்டு. இதில் கால்சியம், பொட்டாசியம், சோடியம், பாஸ்பரஸ், சல்பர் மெக்னீசியம் மற்றும் இரும்புச்சத்துக்கள் உள்ளன.

- தீக்காயம், வெந்நீர், சூடான எண்ணெய் இவற்றால் ஏற்படும் காயங்களுக்குக் குருத்து வாழை இலையைப் பாதிக்கப்பட்ட இடத்தில் சுற்றிக் கட்டு போடலாம். வாழைச்சாரைப் பிழிந்து காயம்பட்ட இடத்தில் தடவலாம்.

- வாழைச்சாறு வயிற்றுப்போக்கு, மூலம், கையில் அரிச்சல், இருமல், வயிற்றுக்கோளாறு, கோழைச்சுரப்பு அதிகரித்தல், வயிற்றுப்புண், குடற்புண்களைக் குணமாக்கும்.

- சொரியாசிஸ், தோல் நோய்கள், ரத்தத்தில் உண்டாகும் தொற்றுகள், ரத்தக்குறைபாடுகள் ஆகியவற்றை வாழைத்தண்டு போக்குகிறது.

- சின்னம்மை, படுக்கைப்புண், உடலில் தீக்காயம் ஏற்பட்டால் பெரிய வாழை இலையில் தேன் தடவி அதில் பாதிக்கப்பட்டவன சில மணிநேரம் படுக்க வைக்க வேண்டும். இதைத் தொடர்ந்து செய்தால் குணமாகும்.

- தோல் அலர்ஜி, கொப்புளங்கள் இருந்தால் வாழை இலையைப் பாதிக்கப்பட்ட இடத்தில் கட்டி வைக்க வேண்டும்.

- அஜீரணம், மூல நோய்க்குப் பாலுடன் ஒரு வாழைப்பழம் சாப்பிட்டு வர சரியாகும். தொடர்ந்து 2 அல்லது 3 வேளை சாப்பிட்டால் குணமாகும்.

ந.பிருந்தா
இளம் வணிக மேலாண்மை (இடை)

எங்களிடம்

பாபின் கட்டிங், கிரைண்டர் மெஷின் மற்றும் அதற்குண்டான ஸ்பேர்ஸ், ரைஸ் மில் ஸ்பேர்ஸ் ஸ்டீல் கிராப்ட் மெட்டீரியல்ஸ் கிடைக்கும்.

# சன் ஏஜென்ஸி

நெ. 6, மும்தாஜ் பில்டிங்,
விஜயா தியேட்டர் எதிர்புறம்,
மயிலாடுதுறை - 609 001.

☎ : 224418, 9360549433



## இல்லை என்றாலும் பயனுண்டு

- அல்போனியாவில் மதங்கள் இல்லை
- ஆப்கானிஸ்தானில் இரயில்கள் இல்லை
- ஆப்பிரிக்காவில் புலிகள் இல்லை
- ஈக்களுக்குப் பற்கள் இல்லை
- சவுதியில் நதிகள் இல்லை
- சந்திரனில் வாயுமண்டலம் இல்லை
- முதலைக்கு நாக்கில்லை
- சுண்டெலிக்கு வியர்ப்பது இல்லை
- மண்ணுளிப் பாம்பிற்குக் கண்கள் இல்லை
- மலைப்பாம்பிற்கு விஷமில்லை
- பாம்பு, மீன்களுக்குக் கண் இமைகள் இல்லை
- தவளைக்குக் கழுத்து இல்லை
- யமுனைநதி கடலில் கலப்பது இல்லை
- வட துருவத்தில் நிலப்பரப்புகள் இல்லை
- யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை
- பாம்பிற்குக் காதில்லை
- வெளவாலிற்குக் கண் இல்லை
- காண்டாமிருகம் கொம்பினால் தாக்குவதில்லை
- நண்டிற்குத் தலை இல்லை
- ஈசலுக்கு வயிறு இல்லை

த.தமிழ்வாணன்
இளம் வணிகம் (முதல்)

எங்களிடம்

